
திருச்சாய்க்காடு
இயற்பகையார் புராணம்


காவிரிப்பூம்பட்டினம் ...
வாருங்கள் அடியாரே தங்கள் வருகையால் நான் மிக்க மகிழ்வுற்றேன்.
நாடிவந்த அடியார் எவருக்குமே நாடிய பொருள் எதையுமே இல்லை என்று சொல்லாத இயற்பகையார் எனும் வணிகர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் இறைவர் சிவபெருமான் அந்தணர் வடிவில் அவரிடம் வருகிறார்


தாங்கள் வேண்டுவது யாது எனக் கூறுங்கள்.
நீர் சிவனடியார் எதை வேண்டினும் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கும் மாண்புடையவர் எனக் கேள்விப்பட்டோம்
நான் நாடுவது எதுவாயினும் அதனை மறுக்காமல் அளிப்பீர்களா ?
நீங்கள் வேண்டுவது யாது எனக் கூறுங்கள். எம்மிடம் இருப்பவை எல்லாம் எம் பெருமாம் உடையதே.
நாயனரே! நான் உமது மனைவியைப் பெறவேண்டி இங்கு வந்தேன். நீர் உமது மனைவியை எம்முடன் அனுப்பிவைப்பீரோ
நீங்கள் எம்மிடம் இருக்கும் பொருளை கேட்டதற்கு மிக்க மகிழ்ச்சி ஐயா.


இயற்பகையார் வீட்டின் உள்ளேச் சென்று மனைவியிடம் .....
என் அருமை மனைவியே இங்கே வந்துள்ள துறவியாருக்கு நான் உன்னைத் தந்துவிட்டேன்.
ஆ என்ன ?


முதலில் கலங்கிய அப்பெண்மணி பின்னர் தெளிவடைந்து...
இதுநாள் வரை எம்மைக்காத்த எம் அன்புக் கணவர் இடும் ஆணை இதுவானால் அதை நிறைவேற்றுவதே என் கடமை.. வாருங்கள் செல்வோம்.
எல்லாம் எம்பெருமான் செயல்


இயற்பகையார் மனைவி துறவியின் காலில் விழுந்து வணங்குகிறார்.....
நலமுடன் இருப்பாயாக என்னுடன் புறப்படு.


அடியாரே நான் உனது மனைவியை அழைத்துச் செல்லும்போது உமது உறவினர் தடுக்க நேருமே! என்ன செய்யலாம்.
ஐயா. நானும் உடன் வருகிறேன் அவர்களை வெல்வது என் கடமை.


உறவினர்கள் உருவிய வாளுடன் எதிர்த்து வருகிறார்கள்
நல்ல குலத்திற்குப் பொருந்தாத செயல் செய்யத் துணிந்தீரே. இதை நாங்கள் அனுமதியோம்.


எல்லோரும் சென்று விடுங்கள் அடியார்க்கு நான் கொடுப்பதை எவர் தடுத்தாலும் அவர்களை அழிக்கத் தயங்க மாட்டேன்.


இயற்பகையாருக்கும் அவ்வூர் இனத்தவர்களுக்கும் பெரும் சண்டை நிகழ்கிறது.


பெரும் எண்ணிக்கையில் ஊர்மக்கள் எதிர்படவே துறவியும் அஞ்சுகிறார்.
ஆ ! என்ன செய்வது
இறைவரே அஞ்சவேண்டாம்.
இயற்பகை வெல்லும்.


அனைவரையும் வீழ்த்திவிட்டு மூவரும் செல்கின்றனர்.
இறைவர் முன்னே, நாயனாரின் மனைவி பின்னே
இயற்பகையார் அதற்கும் பின்னே.


திருச்சாய்க்காடு வந்தது.
திருச்சாய்க்காடு
இயற்பகையாரே நீர்
திரும்பிச் செல்லலாம்.


சற்றும் கலக்கமின்றி இயற்பகையார் செல்கிறார்.
திருச்சாய்க்காடு


திடீரென்று
இயற்பகையாரே ஓலம் எம்மைக் காப்பாற்றும்.
திருச்சாய்க்காடு


துறவியின் ஓலம் கேட்டு, இயற்பகையார் திரும்பவும் அவ்விடத்திற்கு ஓடி வருகிறார். அங்கே துறவியைக் காணாமல் தமது இல்லாளை மட்டுமே காண்கிறார்.
ஆ ! என்ன அடியார்க்கு என்ன நேர்ந்தது ? அவரைக் காணவில்லையே


இருவரும் வியந்து நிற்க வந்த அடியார் வானத்தில் விடைபாகராய் காட்சித்தருகிறார்.
ஆகா இறைவனாரே! நீரே இந்தத் திருவிளையாடலை நிகழ்த்தினீரோ? என்ன புண்ணியம் செய்தோமோ !!!
திருச்சாய்க்காடு


அண்ணலே! நீவிர் எங்களுக்காக கொண்ட கோலத்திற்கு வணக்கம். எளிய எங்களை விரைவில் உம் அடியவராய் ஆக்கிக் கொண்டீர். தங்கள் திருவடிக்கு வணக்கம்
திருச்சாய்க்காடு


எண்ணிய இவ்வுலகில் நம்மிடம் நீ செலுத்திய அன்பைக் கண்டு மகிழ்ந்தோம். தூய அன்புடையாரே நினது மனையுடன் எம்மிடத்திற்கு வருவாயாக. நாம் உம்மை ஆட்கொண்டோம்.
திருச்சாய்க்காடு